# யடியன்தொட்ட பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலி 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா. 907,085 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் நுகர்வோர் பொருட்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூல்நிலையத்திற்கு புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைக்கப்பெற்ற கழிவு, பெற்ற கழிவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் வருடம் ரூபா. 60,505 பெறுமதியான நுகர்வோர் பொருட்கள், இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்கில் உற்படுத்தப்பட்டிருந்தை சரி செய்வதற்காக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் மீண்டும் அப் பெறுமதியினை பொதுக் களஞ்சியக் கணக்கு மற்றும் தொங்கல் கணக்குகளிலும் சரி செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2013, 2014, மற்றும் 2015 வருங்களுக்காக செலுத்தப்பட்ட நீதிமன்ற குற்றப்பன ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூபா.514,185 மீளாய்வண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அவ்வருடத்திற்குரிய செலவு அப்பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2014, மற்றும் 2015 வருங்களுக்காக செலுத்தப்பட்ட முத்தரைக் கட்டண பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா.65,050 மீளாய்வண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அவ்வருடத்திற்குரிய செலவு அப்பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 02 நிலையான வைப்புக் கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா.179,356 ஆயினும் ரூபா. 149,397 ஆக காட்டப்பட்டிருந்ததனால் ரூபா. 29,959 வினால் வட்டி வருமானம் மற்றும் கடன்பட்டோர் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் மாகாண சபை மற்றும் அமைச்சரவைகளிடமிருந்து வேலைகளுக்காக கிடைக்கப் பெற்ற ரூபா.23,339,349 நன்கொடை மற்றும் அந்த வேலைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா.21,712,502 வினையும் மூலதன நன்கொடை மூலதன செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் உன்மையயான முத்தரைக் கட்டண வருமானத்தை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் ரூபா. 5,800,000 வினை வருமான செலவுக் கணக்கில் வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய சம்பள மீளலிப்பு நன்கொடை ரூபா.328,220 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) பௌதீகமாக காணப்படவில்லை என்று கண்டறியப்பட்டிருந்த சபைக்குரிய ரூபா. 969,054 பெறுமதியான 18 கட்டடங்கள், காணி மற்றும் கட்டடக் கணக்கில் காட்டப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துப் பெறுமதி மேற்குரிப்பிட்ட பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 <u>இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமும் கணக்கு மீதிகளுக்கு இடையே ரூபா. 10,219,879 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.3.3 <u>தொங்கல் கணக்கு</u>

கடந்த வருடங்களுக்குரிய கண்டறியப்படாத ரூபா. 3,061,151 தொங்கல் கணக்கு மீதியினை கண்டறியாது திரட்டு நிதியத்தில் பதிவளிக்கப்பட்டிருந்தது.

1.3.4 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நி.பி.396 (இ) | கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா. 39,617 பொறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 570,571 | 2008 வருடம் முதல் 2014 வரையான காலத்திற்குரிய 45 சந்தர்ப்பங்களில் வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா. 1,099,442 பல்வேறு வைப்புக்களும் மற்றும் 1973 வருடம் முதல் 2010 வரையான காலத்திற்குரிய 276 சந்தர்ப்பங்களில் வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா.66,205 வீட்டு வாடகை வைப்பு தொடர்பாக பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றை பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 1646 | வாகன ஓட்டக் குறிப்பு பயணம் மேற்கொள்ளப்பட்ட மாதத்தின் பின்வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டுமாயினும் சபையினது எந்தவொரு வாகனம் தொடர்பாகவும் மேற் கூறிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி 1597/8 ம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை. | தொலைத் தொடர்புக் கோபுரங்கள் / என்டனா கோபுரங்கள் அமைக்கும் போது கோபுரத்தின் உயரம் மீற்றர் 05 இற்கும் 20 இற்கும் இடையில் ரூபா. 20,000 மற்றும் அதிகரிக்கும் ஒவ்வொரு மீற்றர் தொடர்பாக ரூபா.100 படி செயன் முறைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்தும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தரவுகளின் அடிப்படையில் 08 கோபுரங்கள் தொடர்பாக ரூபா.166,500 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) சப்ரகமுவ மாகாண சபை பிரதான அமைச்சரவை செயலாளரின் 2010 நவம்பர் 16 ஆம் திகதி சீஎம்/ஏடீ/20/03 ம் இலக்க சுற்றுநிரூபம் | கனிஷ்ட சேவைகளுக்காக நியமனம் பெற்ற 10 ஊழியர்கள் நியமனம் வழங்கப்பட்ட பதவிகளில் அமர்தப்படாமல் வேறு வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர் |
| (ஈ) 2009/01 மற்றும் மார்ச் 09 ஆம் திகதி சபரகமுவ மாகாண சபை ஆணையாளரின் சுற்றுநிரூபத்தின் 1.5 ஆம் பிரிவு | 2009 ஆம் வருடம் தொடர்பாக குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு அது 2011 வருடம் முதல் அறவிடப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீடு எதிர்வரும் 03 வருடம் தொடர்பாக மாத்திரம் செல்லுபடியாகும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 2016 ஆம் வருடம் தொடர்பாகவும் அம் மதிப்பீடின் பிரகாரம் பொது சந்தைக் கடை குத்தகை வாடகை அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 1,910,095 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 2,116,635 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 206,540 பின்னடைவைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 206,540 தொகை பின்னடைவுக்கு 02 வருமான விடயங்களின் வீழ்சியும் 05 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை ரூபா.000 | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு ரூபா.000 | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் ரூபா.000 | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு ரூபா.000 | 2016.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை ரூபா.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி ரூபா.000 | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை ரூபா.000 | |
| i | ஆதனவரியும் வரியும் | 2,145 | 1,469 | 3,686 | 3,125 | 676 | 561 | 1,237 |
| ii | வாடகை | 788 | 281 | 4,806 | 4,294 | 507 | 512 | 1,019 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 13,683 | 13,683 | 5,333 | - | - | 5,333 | 5,333 |
| iv | ஏனைய வருமானம் | 15,686 | 13,388 | 26,436 | 18,243 | 2,298 | 8,193 | 10,491 |
| | மொத்தம் | 32,302 | 28,821 | 40,261 | 25,662 | 3,481 | 14,599 | 18,080 |

0 1 .
1 6 0
. 1
2 0
0 1

2.3.2 <u>மதிப்பீட்டு வரி</u>

மதிப்பீட்டு வரி மற்றும் காணி வரி செலுத்தாதது தொடர்பாக அந்த வரியினை அறவிட வேண்டிய இடத்துக்குரிய உரிமையாளரின் சொத்துக்களை உடமையாக்கி விற்பனை செய்தவதன் மூலம் அல்லது பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தும் மாதிரி சோதனையின் படி 47 காணி உரிமையாளர் மற்றும் மதிப்பீட்டு வரி / காணி வரி இடங்களுக்கு 05 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாத ரூபா.121,879 மதிப்பீட்டு வரி மற்றும் காணி வரி அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3.3 <u>குத்தகை வாடகை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சதுர அடி 136 அளவிலான பஸ் வண்டி நிலையத்தின் 12 கடைகளில் 10 கடைகளுக்கு ரூபா.3,000 படியும் 02 கடைகள் ரூபா.1,900 படியும் மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் வருடம் திசம்பர் 23 ஆம் திகதி ஏற்பட்ட தீயின் பின்னர் கடைகள் முன்பு இருந்ததனை விடவும் நல்ல நிலையில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும் 2009 திசம்பர் 08 ஆம் திகதி செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி குத்தகை வரி அறவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் வருடத்தின் பின்னர் வருடாந்த குத்தகை வாடகை ஒப்பந்தம் புதுபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது வியாபாரச் சந்தையில் சதுர அடி 240 அளவிலான கடையொன்று 2015 ஜனவரி முதல் 2017 ஜனவரி வரை பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அது கொம்போஸ்ட் பசளை விற்பனைக்கு பயன்படுத்த தீர்மானித்திருந்தும் பசளை விற்பனை சபையில் நடை பெற்றுக் கொண்டிருந்ததனால் 02 வருடகாலமாக கடை வாடகை சபைக்குக் கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

அ) சபையினது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மற்றும் கூடுதல் வரவு செலவுத்திட்டத்தின் மூலமும் மக்கள் பொது நலத்திற்காக தேவைப்படுகின்ற நடவடிக்கை மேற்கொள்வதற்காக மீண்டெலும் மற்றும் மூலதன ஒதுக்கீடாக ரூபா.59,596,829 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஒதுக்கீட்டில் தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா.1,489,455 வினை குறைக்கும் போது சபை நடவடிக்கைகளுக்காக செலவு செய்ய முடியுமான பணம் ரூபா. 58,107,374 ஆகும். நிதிக் கூற்றின் படி சபையினால் மீண்டெலும் செலவுகளுக்காக ரூபா.42,963,748 வும் மற்றும் மூலதன செலவுக்காக ரூபா.2,138,284 வும் கூட்டு மொத்தம் ரூபா. 45,102,032 உண்மையில் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மொத்த நிகர ஒதுக்கீட்டில் ரூபா. 13,005,342 வும் நூற்றுக்கு 22.4 வீதமும் சபை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மக்கள் பொது நலத்திற்காக நேரடியாக தொடர்புபடும் 08 செலவுவிடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 43 முதல் 100 சதவீதம் மிகுதியாக இருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 திசம்பர் 31 திகதியிலிருந்து மாகாண அரச சேவையினால் நிரந்தர நியமனம் பெற்றிருந்த 10 ஊழியர்களுக்கு 2016 ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய முறையாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா. 64,950 மற்றும் ரூபா.16,238 வினை அறவிட சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இதனைத் தவிர இக்காலத்திற்குரிய விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டிய ரூபா.18,789 ஊழியர்களின் சம்பளத்தில் அறவிட்டு அனுப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யட்டியன்தொட்ட நகரத்தில் 7.5 பர்ச்சஸ் நிலத்தை குத்தகைக் வழங்கியது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மேற்குறிப்பிட்ட நிலம் 1981 வருடம் முதல் வருடாந்த குத்தகை அடிப்படையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2001 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2011 ஒக்டோபர் 14 ஆம் திகதியில் முடிவடையும் அடிப்படையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் படி ஒப்பந்தக்காலம் முடிவடைந்ததும் இரண்டு பிரிவினரதும் சம்மதத்தின் பேரில் மீண்டும் 10 வருடம் தொடர்பாக ஒப்பந்தத்திற்கு வர முடியுமாக இருந்தும் 2017 ஜனவரி 06 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தமொன்றுக்கு வராது அந் நிலத்தினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

(ii) குத்தகை ஒப்பந்தம் 6 ஆவது பிரிவின் பிரகாரம் 05 வருடத்திற்கு ஒரு முறை பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினைப் பெறப்பட்டு அந்த மதிப்பீட்டினைப் போல் நூற்றுக்கு 150 குத்தகை வாடகை அறவிட வேண்டியிருந்தும் ஒப்பந்தம் ஆரம்பமான 2001 வருடத்தின் பின்னர் 15 வருடங்களுக்குள் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) புதிய மதிப்பீடு தொடர்பாக பிரதான மதிப்பீட்டாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட இடம் தொடர்பாக காணிப் பத்திரம் சரியான தரவுகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதை அறிந்திருந்தும் மீண்டும் குறிப்பிட்ட பத்திரங்களை சமர்ப்பித்து புதிய மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்ள 2017 ஜனவரி 06 ஆம் திகதி வரை சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1985 வருடம் முதல் 2015 வரையிலான காலப்பகுதிக்குரிய 48 நபர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா.625,550 ஊழியர் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 <u>செயற்பாட்டு செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுல் வீதிகள் மற்றும் நடைபாதை பழுதுபார்த்தல் பராமரித்தல் வேலைத்திட்டத்தின் கீழ் பொது நிதியத்தின் ஒதுக்கீட்டின் மூலம் 18 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. திட்டமிடல் பிரிவின் அறிக்கைப் படி, வரவு செலவு அறிக்கையில் உட்படுத்தப்பட்ட வீதிகள் தவிர்ந்து வேறு 19 வீதிகள் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா.7,219,488 மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 2016 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 5,126,997 செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த 19 வேலைத்திட்டத்தின் ரூபா. 873,066 பெறுமதியான 3 வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி வேலைத்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட பணம் ரூபா.1,706,997 ஒதுக்கீடு செய்யப்பட்டதனைவிட அதிகமாக செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வரவு செலவு திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அத்தியவசியமான பழுதுபார்க்க வேண்டிய பரிந்துரையான கலடுவாவ திடக் கழிவு மத்திய நிலையத்திற்கு செல்லும் பாதையினை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நூல்நிலையம் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த கட்டடம் பல வருடங்களாக முன்பாகவே பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதன் காரணமாக 2006 வருடம் நிர்மானிக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்தின் கேட்போர் கூடத்தினை 2017 ஜனவரி 05 ஆம் திகதி வரை தற்காலிகமாக நூல்நிலையத்தினை நடாத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்டதனால் கேட்போர் கூடத்தினை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் கிடைக்க வேண்டிய வருமானம் சபைக்கு கிடைக்காததுடன் சபை நடவடிக்கைகளுக்கு கேட்போர் கூடத்தினை பயன்படுத்த முடியாதுமிருந்தது.

3.4 <u>விளைவற்ற / குறைவாகப்பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்</u>.

07 வாகனம் 03 முதல் 08 வருட காலமாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அவ்வாகனங்களை பழுது பார்த்து மீண்டும் அதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொன்றிருக்கவில்லை.

3.5 <u>கண்டறியப்பட்ட நட்டம்</u>

2010 மற்றும் 2011 வருடத்தில் கொம்போஸ்ட் பசளை வேலைத்திட்டத்திற்காக அலுவலகம் மற்றும் களஞ்சியம் நிர்மானிப்பதற்காக முதற்கட்டமாக ரூபா. 536,520 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஜனவரி 05 ஆம் திகதி கணக்காய்வு பரிசேதனைப்படி அவ்வாறான ஒரு கட்டடம் நிர்மானிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது.

3.6 <u>ஒப்பந்த நிருவாகம்</u>

"தொறின் தொரட்ட கமின் கமட்ட" பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தலின் கீழ் பரேஸ்ஸேல்ல டீ.எம். சில்வா மாவத்த பாலம் நிர்மானிப்பதற்கான ஒப்பந்த்திற்காக 2014 நவம்பர் 21 ஆம் திகதி ரூபா.1,448,273 கைச்சாத்திடப்பட்டது. 2017 ஜனவரி வரையில் இந்த வேலைத்திட்டத்திற்காக 03 நிதிப்பாய்ச்சல் மூலம் ரூபா. 767,861 செலவு செய்யப்படடிருந்ததும் பாலத்தின் மேற்பகுதி நிர்மானிப்பட்டிருக்காததுடன் அகற்றப்பட்ட கொங்கீட் கம்பத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பற்ற முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

3.7 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம்.</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2009 வருடம் முதல் கொம்போஸ்ட் பசளை உற்பத்தித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்ததுடன இந்த வேலைத்திட்டத்தினை மேலும் வெற்றிகரமாக செய்து கொண்டு செல்ல தடங்கலாகவுள்ள கீழ் வரும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) அழிவடையாத பொருட்களை விற்பனை செய்வதற்கு முன்னர் களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சிய வசதி மற்றும் மீள்சுழற்ச்சி வசதிகள் காணப்படாமை.

(ii) இலத்திரனியல் கழிவுகளை கொள்வனவு செய்யக் கூடியவர்களை அறிந்து கொள்வதற்கு தவறியமை.

(iii) நிரந்தரமாக நீர் வசதி மற்றும் இடவசதி காணப்படாமை.

(iv) ஊழியர் சேமலாபம் மற்றும் தேவையான இயந்திர உபகரணங்கள் போதுமானதாக இல்லை.

(ஆ) பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்ற அழிவடையாத பொருட்கள் தொடர்பாக மீள்சுழற்ச்சி முறையொன்றும் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(இ) கொம்போஸ்ட் பசளை தயாரிக்கப்பட்டதன் பின்னர் மிகுதியாகும் கழிவுகள் குமித்து வைக்கும் இடத்தினை மறைக்கும் வகையில் சுவர்கள் இல்லாததனால் அக் கழிவுகள் மற்ற இடங்களுக்கும் வடிந்து போகக் கூடியதாக இருப்பதனால் மேலதிக சூழல் பிரச்சினைகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் அதிகமாக காணப்பட்டது.

## 4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்</u>

### 4.1 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

மீளாய்வாண்டிற்காக சமாப்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 10 தொடர்பாக மொத்தம் ரூபா.2,724,500 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 23 தொடர்பாக ரூபா.33,686,690 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 14 இருந்து 94 வரை பெறுமதியின் அடிப்படையில் ரூபா.11,064,179 ஒதுக்கீடு சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை அத்துடன் 04 செலவுவிடயங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டினைவிட அதிகமாக ரூபா.1,803,283 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5. <u>முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்</u>

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (iii) நிலையான சொத்துப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br>(iv) நாற்குறிப்பு தொடர்பாக தெளிவான குறிப்பு முன்வைக்கப்படவில்லை. |

(i) தொங்கல் கணக்கு தீர்க்கப்பட்டிருக்கவில் லை.

(ii) காலம் கடந்த வைப்புக்கள் வருமானத்திற்கு சாட்டப்படவில்லை.

(v) வருமானம் ,செலவு சொத்துக்கள், நிகழ்வுகள் குறைவாகவும்
அதிகமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(vi) பேரேட்டு கணக்கு மீதி மற்றும் பதிவேடுகள் இனங்காமை.

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

செலவு ஒதிக்கீடுகளில் கவனத்திற் கொள்ளக் கூடியளவில் மிகுதியாக இருந்தது.

(இ) வருமான நிர்வாகம்

(i) நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) குத்தகை வாடகை குறிபிட்ட காலத்தில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

(ஈ) வாகன நிர்வாகம்

(i) நாளாந்த செலுத்தும் பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) வாகன லெக் பதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பழுது பார்க்கக் கூடிய வாகனம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளாதது.

(உ) நிதிக் கட்டுபபாடு

(i) மிகை நிதி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) காலம் கடந்த காசோலை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.